REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ வெளியூரில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 17உ வியாழன் (3—10—57) ★ வெளியூர்: புரட்டாசி 18உ வெள்ளி (4—10—57) [இதழ் 95

துர்காதேவிக்கு 5,000 கால்நடைகள் பலி!

காட்மண்டு, அக். 2—

நேபாளத் தலைநகரான காட்மண்டுவில் உள்ள பல கோவில்களிலுமாக இன்று, துர்காதேவிக்கு 1,000 எருமைகளும், 4,000 ஆடுகளும் 'காவு' கொடுக்கப்பட்டனவாம்!

முதல் பலி, அரண்மனைக்கோவிலில் ஆரம்பமாகியதாம்; அப்போது 31 குண்டுகள் போடப்பட்டனவாம்!

இதன் மூலம், இதர பலிகள் துவக்குவதற்கு அறிவிப்புத் தரப்படுவது வழக்கமாம்!

தென்னாட்டில் உணவுப் பற்றுக்குறை:

டெல்லி சர்க்காரின் நோக்கம்தான் என்ன?

தி. மு. கழகத்தின் சட்ட மன்றப் பணி

தீர்ப்பளிக்கும் தகுதி அமைச்சருக்கு ஏது?

'எங்கள் எசமானர்கள் மக்களும் எங்கள் மனமுமே'

திருவண்ணாமலை மாநாட்டில் அண்ணா முழக்கம்

கடந்த 22—9—57-ல், திருவண்ணாமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டில் பேசிய அண்ணா அவர்கள், நம் கழகத்தின் சட்ட மன்றப் பணியினைக் குறைகூறுபவர்களின் போக்கு குறித்தும், கழகத் தோழர்களின் உணர்ச்சி நிலை குறித்தும் விளக்கிப் பேசியதாவது :—

"சட்டமன்றத்தில் நானும், என்னுடைய நண்பர்களும் நல்லபடி பணியாற்றுகின்றோமா இல்லையா என்பதுபற்றி அமைச்சர் சுப்பிரமணியம் எடுத்துச் சொன்னதைப் பல நண்பர்கள் ஆராய்ந்து பார்த்தார்கள்; பல தோழர்கள் அதற்கு மறுப்புரை அளித்தார்கள்; அந்தநேரத்திலேயெல்லாம் நான் மெத்த வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். என் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன் என்றால்—அமைச்சர் சுப்பிரமணியம், தி. மு. கழகத்தார் சட்டசபையில் சரியானமுறையில் பணியாற்றுகிறார்களா இல்லையா என்பதை எடுத்துப் பேசியதைக் கேட்டு உங்களுக்கு வருத்தமும் கோபமும் ஏற்பட்டதென்றால், அதிலிருந்து நாங்கள் எப்படி வேலை செய்கிறோம் என்பதைப்பற்றித் தீர்ப்பளிக்கத் தகுந்த தகுதி சுப்பிரமணியத்திற்கு இருப்பதாக நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்கு மிக்க வருத்தத்தை அளித்தது.

"நாங்கள் சட்டசபையில் நல்லபடி பணியாற்றுகின்றோமா இல்லையா என்பதுபற்றி, பாராளுமன்றத்திலே பல ஆண்டுக்காலம் அனுபவம்பெற்ற சர். ஏ. இராமசாமி முதலியார் சொன்னால் கேட்கலாம்; காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் சொல்லியிருப்பாரானால் ஆர்வத்தோடு கேட்டிருக்கலாம்; சர். சி. பி. இராமசாமி அய்யர் சொன்னால் நம்மைத் திருத்திக்கொள்ள முற்பட்டிருக்கலாம்; இராசகோபாலாச்சாரியார் சொன்னால் யோசித்திருக்கலாம்; பெரியார் இராமசாமி சொன்னால் சிரித்துக் கொண்டே சிந்தித்திருக்கலாம்; ஆனால், சுப்பிரமணியம் அவர்கள் சொல்லுகிறார் என்றால், அதைப் பற்றி நீங்கள் கவலைப்படக் காரணம் என்ன?

"நம்முடைய வீட்டிலே இருக்கிற மகனுக்கு நாம் அருமையான ஒரு பெண்ணைத் தேடி கலியாணம் செய்தான பிறகு அந்த மகன் பார்த்து, அந்தப் பெண் அழகானவள் — அவள் நல்லவள்—நல்ல சுபாவம்படைத்தவள் என்று சொன்னால், அதை நமது காதுகுளிரக் கேட்கவேண்டுமே தவிர, அவள் குழாயடியிலே தண்ணீர் பிடிக்கப் போகின்ற நேரத்தில் எதிர் வீட்டுத் திண்ணையிலே குறும்பாக உட்கார்ந்திருந்தவன் பார்த்து, 'புதிதாக வந்திருக்கிறாளே ஒரு பெண்—அவள் மெத்த நல்லவள்?' என்றால் என்ன பொருள்? ஏதோ அவன் அந்தப்புறத்திலேயிருந்து பார்த்த பார்வையில், இந்தப் பெண் கொஞ்சம் ஏமாந்துவிட்டாள் என்று பொருளே தவிர, அதிலே ஒன்றும் நாணயம் இருப்பதாகப் பொருளில்லை.

"ஆகையினாலே சட்டமன்றத்தில் நாங்கள் சரியானமுறையில் பணியாற்றுகின்றோமா இல்லையா என்பதை இரண்டு எசமானர்களிடத்திலே விடுவதற்கு விரும்புகின்றேன்; ஒன்று—எங்களுடைய உள்ளம்; அந்த எசமானன்—எங்களுடைய மனம்; எங்களுடைய மனத்திற்குச் சரியெனப்பட்டதை நாங்கள் செய்கிறோமா இல்லையா என்பதை, எங்கள் மனம் எங்களுக்குச் சொல்லவேண்டும்.

"இரண்டாவது எசமானர்கள் நீங்கள். நீங்கள் பார்த்து, 'நாங்கள் சரியாக நடக்கிறோமா இல்லையா' என்று சொல்லவேண்டும்; சுப்பிரமணியத்திற்கு அந்தத் தகுதியில்லை.

"ஏன் இல்லையென்று நான் சொல்லுகிறேனென்றால், சுப்பிரமணியம் அவர்கள் எதிர்ப்புறத்திலே வீற்றிருக்கின்றவர்; நாம் எப்பொழுது தவறுகிறோமோ அப்பொழுது அவருக்கு அது இலாபம்; நாம் எப்பொழுது தவறாமல் இருக்கிறோமோ அப்பொழுது நஷ்டம். ஆகையினால் அவர் பார்த்து, 'இவர்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை; நல்லபடி எதிர்க்கவில்லை' யென்றால் அதனுடைய பொருள் என்ன? நம்முடைய முறையை மாற்றிக்கொள்ளச் சொல்லுகிறார்; நம்முடைய முறையை ஏன் மாற்றிக்கொள்ளச் சொல்கிறார் என்றால், இன்றையத் தினம் நாம் கையாளுகின்ற முறை அவரைக் குத்துவதாக இருக்கின்றது; அவருடைய உள்ளத்தைக் குடைவதாக இருக்கின்றது. ஆகையினால் அந்த முறைகளை மாற்றிக்கொள்ள நாம் தயாராக இல்லை.

"ஆகையினால், சுப்பிரமணியம் அவர்கள் நம்முடைய சட்டசபை நடவடிக்கையைப் பற்றிச் சரியாக இருக்கிறதா, இல்லையா என்று தீர்ப்பளிப்பதற்குத் தகுதியற்றவர் என்பதை நான் இரண்டு மூன்று காரணங்கள் மூலம் விளக்க முடியும்; ஒன்று—அவருக்குக் கிடைத்திருக்கின்ற பாராளுமன்ற அனுபவம், நாம் போகாதற்கு முன்னாலே அவருக்குக் கிடைத்ததே தவிர, நாம் பெறவே முடியாத அனுபவத்தை அவர் பெற்றார் என்று குருடனும் கருதமாட்டான்; ஆனால், ஏன் அவர் அப்படிச் சொல்லுகிறார் என்றால், புராணத்திலே ஒரு கதை உண்டு —உங்களுக்குத் தெரியும்—கருடனைக் கண்டால் பாம்புக்குப் பயம்; ஏன்? கருடன் பாம்பை அப்படியே கொத்திக் கொன்றுவிடும். உங்களுக்கு புராணத்திலே தெரியும்—பரமசிவனுடைய ஜடாபாரத்திலே நாகங்களெல்லாம் தொங்கிக் கொண்டிருக்கின்றன — என்று; அந்தப் பரமசிவனுடைய ஜடாபாரத்திலே இருந்த நாகம் ஒருநாள் படமெடுத்துக்கொண்டு ஆடிக்கொண்டிருந்த நேரத்தில், அந்த வழியிலே கருடன் சென்றதாம்; சென்ற கருடனைப் பார்த்தவுடன்—சாதாரணமாக பூலோகத்திலே பாம்பு கருடனைப் பார்த்தால், 'எங்கே கொத்திவிடுமோ' என்று பயந்து பொந்துக்குள்ளே பதுங்கிக்கொள்ளும்—ஆனால் அந்தப் பாம்பு ஜடாபாரத்தில் இருந்த காரணத்தினால் கருடன் வருகிற பொழுது கேட்டதாம்—'கருடா, சௌக்கியமா?'—என்று! உடனே கருடன் எண்ணிற்றாம்—'நம்முடைய காலம் இது; இந்தப் பாம்பு மட்டும் கீழே உலாவிக்கொண்டிருந்தால், 'கருடா சௌக்கியமா' என்றா கேட்டிருக்கும்? நம்முடைய நிழல் பட்டதும் பொந்துக்குள்ளே அல்லவா பதுங்கிக்கொண்டிருக்கும்?'—என்றெல்லாம் எண்ணி, அந்தக் கருடன் பாம்பைப் பார்த்து சொல்லிற்றாம்—'சௌக்கியம்தானப்பா! அவரவர்கள் இருக்கவேண்டிய இடத்திலே இருந்தால் சௌக்கியம்தான்!'—என்று எடுத்துச் சொல்லிற்றாம்!

"அதனுடைய அர்த்தம் என்ன என்றால் 'கருடா, சௌக்கியமா?' என்று கேட்கிற நீ, பரமசிவனுடைய ஜடாபாரத்திலேயிருந்து கீழே இறங்கி தரையிலே நடமாடினால், என்னைப் பார்த்தால் நீ எவ்வளவு திகிலடைவாய் என்பது எனக்கும் தெரியும்—உனக்கும் தெரியும்—உலகத்திற்கும் தெரியும்; ஆனால் நீ, இருக்க

(4-ம் பக்கம் பார்க்க)

வாங்கிய அரிசிக்குப் பணம் தருவதில்லையாம்!

தரமான அரிசியை வடநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்றனராம்!

தென் உணவு மண்டலத்தால் பயன் என்ன?

தென்னாட்டில் நிலவும் பயங்கரமான உணவுப் பற்றுக்குறை நிலை பற்றி டில்லி சர்க்கார் கொண்டிருக்கும் ஆழ்ந்த கவலை(!)யை விளக்கும் சில அருமையான செய்திகள் கிடைக்கின்றன.

தென் உணவு மண்டலம் அமைத்த அவர்கள், அந்த அமைப்பினைப் பயன்படுத்தும் விதம் வெகு வேடிக்கையாக இருக்கிறது.

ஆந்திராவில் கிடைக்கும் உபரி அரிசியை தாங்களே வாங்கி வருவதாக டில்லி சர்க்கார் அறிவித்தனர். ஆனால், அப்படி சர்க்கார் அதிகாரிகள், ஆலைக்காரர்களிடமிருந்து கேட்டுப் பெற்ற அரிசிக்கு இன்னும் பணம் தரவே இல்லையாம்!

ஏற்கனவே கொடுத்த அரிசிக்கே பணம் வராமலிருக்கும்போது, வியாபாரிகள் மேலும் எப்படி அரிசி தருவார்கள்?

அதுமட்டுமல்லவாம்! ஆந்திராவில் கிடைக்கும் நல்ல தரமான அரிசியை, மண்டலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யவும் டில்லி சர்க்கார் முயற்சித்துவருகின்றனராம்!

'தென் உணவு மண்டலம் அமைத்ததே, மண்டலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு அரிசி கடத்தப்படாமலிருக்க வேண்டும் என்பதற்குத்தான்' என்று, விண்ணாணம் பேசிய டெல்லி சர்க்கார், இப்போது தாங்களே முன்னின்று, வெளி மாநிலங்களுக்கு, நல்ல தரமான ஆந்திர அரிசியை ஏற்றுமதி செய்கிறார்களாம்!

அதே நேரத்தில் தமிழ் நாட்டில் நியாய விலைக்கடைகளில் பாதியை மூடிவிடவும் உத்தரவிட்டிருக்கிறார்கள், இதே டெல்லி சர்க்கார்!

தென்னாட்டில் நிலவும் உணவுப் பற்றுக்குறை நிலைபற்றி டெல்லி கொண்டிருக்கும் கவலையை(!) விளக்க வேறென்ன வேண்டும், இந்த நடவடிக்கைகளைத் தவிர?

நாகர்களின் விடுதலைக் கோரிக்கை வெள்ளையரின் தூண்டுதலாம்!

இந்தியர்மீது வெறுப்பூட்டியவர்கள் 'கிறித்துவ மிஷன்காரர்'களாம்!

நாகர் போராட்டம் பற்றி பண்டிதர் கருத்து

நாகர்களின் சுதந்தரக் கோரிக்கையை ஏற்கமறுத்துவரும் பண்டித நேரு, அந்தக் கோரிக்கையை எழுப்புமாறு அவர்களைத் தூண்டியவர்கள் வெள்ளைக்கார அதிகாரிகள்தான் என்று, துணிந்து நாகர் தலைவர்கள் மீது மாசு கற்பித்திருக்கிறார்.

மேலும், இந்திய மக்களை வெறுக்குமாறு நாகர்களுக்குச் சொல்லித் தந்தவர்களும் கிறித்துவ மிஷனரிகளைச் சேர்ந்தவர்களே என்று அவர் கூறியுள்ளாராம்.

மாநில முதன்மந்திரிகளுக்கு குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் வதாவது :—

"நாகர் மலைப்பிரதேசங்களைச் சுற்றிலும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், இரும்புத்திரை ஒன்று இருந்தது; இந்தியாவிலிருந்து இதர பகுதி மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. சில கிறித்துவ மிஷனரிக்காரர்கள்தான் அங்கு சென்றனர்; அவர்கள்தான் இந்தியர்மீது வெறுப்புணர்ச்சியை நாகர்களுக்கு ஊட்டியவர்கள்.

"சில நாகர்கள் கிறித்தவர்களாகக்கப்பட்டு, ஓரளவு கல்வி மான்களாக்கப்பட்டனர்; அதன் காரணமாக, கல்விபெற்றவர்கள் நாகர்களின் [illegible]

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—10—57 வியாழன்

இது என்ன கூத்து?

தென்னகத்தில் ஆந்திரம் நீங்கலாக, மைசூர், கேரளம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களும் உணவுப் பற்றுக்குறையில் திண்டாடிக்கொண்டிருக்கும் மாநிலங்களாகும். ஆந்திரத்தில் மிகுதியாக விளையும் நெல்லைக்கொண்டு, மற்ற தென்னக மாநிலங்களின் உணவுப் பற்றுக்குறையைப் போக்கிக்கொள்வது முடியும்.

மைசூர், கேரளம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களின் உணவுப் பற்றுக்குறையை ஆந்திர அரிசியைக்கொண்டு வெற்றிகரமாக ஈடு செய்துகொள்ள வேண்டுமானால், அதற்கென ஒரு சிறந்த ஏற்பாடு இருக்க வேண்டும். அத் தேவையை உணர்ந்ததின் பலனாகத்தான் தென்மண்டல உணவு அமைப்பு எனப் பெயரிய ஒரு ஏற்பாட்டை இந்தியப் பேரரசு உருவாக்கியது.

மேற்படி அமைப்பை உருவாக்கிய நேரத்தில், தென் மண்டல உணவு அமைப்பில் இடம் பெற்று இருக்கும் உணவுப் பற்றுக்குறையுடைய மூன்று மாநிலங்களுக்கு நீங்கலாக, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி வெளிமாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என ஒரு நிபந்தனை விதித்தது இந்தியப் பேரரசு. அதாவது, தன்னுடைய தேவைக்குப் போக மிகுதியாக உள்ள அரிசியை ஆந்திரம் தென் மண்டல உணவு அமைப்பு மாநிலங்களுக்கே விற்கவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. அந்த நிபந்தனையின்படி, தென் மண்டல உணவு அமைப்பில் இடம் பெற்றில்லாத பம்பாய்—கல்கத்தா போன்ற வடநாட்டு மாநிலங்களுக்கு, ஆந்திராவிலிருந்து வழக்கமாக அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்திருந்ததற்குத் தடையும் விதித்தது இந்தியப் பேரரசு.

இந்தத் தடைவிதிப்புதான் தென் மண்டல உணவு அமைப்பின் அடிப்படை. இவ்வடிப்படையுடன் கூடிய தெ. ம. உணவு அமைப்பின் விளைவாக, தம்தம் உணவுப் பற்றுக்குறை கணிசமான அளவுக்கு நீங்கிவிடக்கூடும்என மைசூர்மக்களும் தமிழக மக்களும் உறுதியாக நம்பினர். அதுபோன்றே அரிசியின் விலை ஏற்றமும் தங்களால் தாராளமாக வாங்கி வயிறார உண்ணக்கூடிய அளவுக்குக் குறைந்துவிடும் என்றும், மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு மாநில ஏழை மக்கள் மகிழ்ந்தும் இருந்தனர்.

அத்தகு மகிழ்ச்சிக்கு இனி இடம் கிடையாது என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. அம்மகிழ்ச்சி வெறும் கனவு—கற்பனை—கானல்நீர் வேட்டை என்பது உறுதியாகிவிட்டது.

தென் மண்டல உணவு அமைப்பு இனியும் இருக்கத்தான் இருக்குமாம். அது தனக்‘குரிய பணியைச் செய்தும் வருமாம். ஆனால், எப்பொழுதும் போல் கல்கத்தாவிற்கும் பம்பாய்க்கும் இனியும் ஆந்திரத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்படுமாம்.

இந்தத் தகவலை இந்தியப் பேரரசின் உணவு அமைச்சர் அறிவித்துள்ளார். இதைக் கூறும் அவரேதான், தென் மண்டல உணவு அமைப்பு, பணி புரிந்துவரும் என்ற உறுதியையும் அளித்திருக்கிறார்.

பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாது என விதிக்கப்பட்டிருந்த தடை இந்தியப் பேரரசால் தளர்த்தப்பட்டுவிட்ட பின்னர், தென்மண்டல உணவு அமைப்பு இருப்பதும் ஒன்றுதான்--இறந்துமடிவதும் ஒன்றுதான். உயிர்போன அழுகிய உடல்தான் இனி அவ்வமைப்பு!

இப்புதிய ஏற்பாட்டின்படி அக்டோபர் திங்களில் 40,000 டன் மட்டரகப் பச்சை-புழுங்கல் அரிசியை இந்தியப் பேரரசிற்கு விற்கத் தம்பிச்சையாக ஆந்திர அரிசி ஆலைக்காரர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்களாம். அதற்குக் கைம்மாறாக, அதே அக்டோபர் திங்களில் 20,000 டன் உயர்ந்த ரக அரிசியைப் பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் தாங்களே நேரடியாக ஏற்றுமதி செய்ய ஆந்திர அரிசி ஆலைக்காரர்களுக்கு உரிமை வழங்கி இருக்கின்றது இந்தியப் பேரரசு.

பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் உயர்ந்த ரக அரிசியை ஏற்றுமதி செய்ய ஆந்திர வியாபாரிகளுக்கு உரிமை வழங்க இந்தியப் பேரரசு ஏன் முன்வர வேண்டும்? அவ்வாறு கல்கத்தாவிற்கும் பம்பாய்க்கும் உயர்ந்தரக அரிசி வழங்கும் பொறுப்பை இந்தியப் பேரரசே ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? இவ்விரண்டு வினைக்களுக்கும் விடை கண்டாக வேண்டும்.

ஆந்திராவில் கிடைக்கக்கூடிய அரிசியை, உயர்ந்த விலை கொடுத்து வாங்கி உண்ணக் கூடியவர்கள் தென்மண்டலத்தில் இல்லை என்பது டெல்லி உணவு அமைச்சரின் ஆராய்ந்த முடிவுபோலும்! மக்களுக்கு அரிசி வழங்கவேண்டும் என்ற அரசாங்கப் பொறுப்பில் மட்ட ரக அரிசிக்கு மட்டுமேதான் இடம்—உயர்ந்தரக அரிசிக்கு இடமில்லையோ என்னவோ! நிற்க.

எப்பொழுதும்போல், பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் அரிசி ஏற்றுமதி செய்யத் தங்களை அனுமதித்தால் அல்லாது இந்தியப்பேரரசிற்கு அரிசிவிற்க முடியாது என ஆந்திர அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் இந்தியப் பேரரசை மிரட்டி இருக்கின்றார்கள். அந்த மிரட்டலுக்கு அடிபணிந்துதான், தென் மண்டல உணவு அமைப்பை நிறுவியபோது தாம் போட்ட முக்கியமான நிபந்தனையான ஏற்றுமதித் தடையை இந்தியப் பேரரசு தளர்த்தி இருக்கிறது. இவ்வாறு நாம் யூகித்துக்கொள்ளலாம். இந்த நடைமுறை, இந்தியப் பேரரசு மிகமிகப் பகட்டாகக் கூறிவரும் சமதர்ம வடிவத்தின் ஒரு கூறுபோலும்!

ஆந்திராவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படப்போகும் இருபதினாயிரம் டன் உயர்ந்த ரக அரிசியின் விலை, ஆந்திர வியாபாரிகளின் விருப்பத்திற்கொப்பக் கூடுதலாக இருக்கும் என்பது நிச்சயம். அவ்விலை கூடுதலை மட்டுமே முக்கியமாகக் கருதி ஆந்திர வியாபாரிகள் அரிசி ஏற்றுமதி உரிமை கோரினர் என எவரும் கொள்ளார்—கூறார். வியாபாரிகள் ஏற்றுமதி உரிமை பெறுவதில் உள்ள இரகசியத்தை இந்தியப் பேரரசு அறியாதிருக்க நியாயமில்லை. குறைந்த அளவிற்கு ஏற்றுமதி உரிமைபெற்று, அதே உரிமைச் சீட்டைக்கொண்டு, முறைதவறி கூடுதலான அளவு ஏற்றுமதி செய்யக்கூடிய நடைமுறை வழக்கில் இருந்துவருகிறது என்பதை இந்தியப் பேரரசு உட்பட, அனைவரும் தெளிவாகத் தெரிந்தே உள்ளனர்.

இதே நோக்கத்துடன்ஆந்திர அரிசி வியாபாரிகள் ஏற்றுமதி உரிமை பெற்றிருந்தாலும் பெற்றிருக்கக்கூடும். அவர்கள் அவ்வாறு தவறிழைக்க துணிந்தால், அதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை—கண்டிப்பதிலும் பொருள் இல்லை. அவர்கள் அவ்வாறு தவறிழைக்கும் வாய்ப்பளித்துள்ள இந்தியப் பேரரசின் போக்கைத்தான் நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

இனி தென்மண்டல உணவு அமைப்பும் இருக்கும். அது தனது பணியை இனியும் ஆற்றவும் ஆற்றும். ஆனால், அம் மண்டலத்தில் இடம் பெற்றுள்ள மைசூர்—தமிழக மக்களுக்கு மட்டும் என்றும் இருந்துவருவதே போன்ற அரிசி திண்டாட்டம் இனியும் இருந்துவரும். இது என்ன கூத்து?

‘ஆபத்து விளையும்; கேடு சூழும்’

மண்டல பொதுப் போலீஸ்படை பற்றி ஏ. கே. கோபாலன்

மங்களூர், அக். 1—

“சட்டத்தை ஒழுங்காக அமுல் நடத்தும் பொறுப்பு மாநிலத்திற்கே இருக்கவேண்டும். அவசியம் ஏற்படும்போது மாநிலங்களே போலீஸ் படையை விரிவாக்க வேண்டும்.

“தென் மண்டலக் குழுவின் பொதுவாக ஒருபோலீஸ்படை அமைப்பது பற்றிய யோசனை மிகவும் ஆபத்தானது.

“பொதுவாக முக்கியத்துவம் பெற்றுள்ள உணவு உற்பத்தி போன்ற பிரச்சினைகளைப்பற்றி முடிவுகள் செய்யாமல் பொது போலீஸ் படையமைப்பில் ஈடுபட்டுள்ளது வருந்தத்தக்கது. இந்த அமைப்புமூலம் மாநிலங்களுக்கிடையேஉள்ள ஒற்றுமை சிதறி பகைமையே வளரும்” என்று பாராளுமன்ற பொதுவுடைமைக்கட்சி உறுப்பினர்திரு. ஏ. கே. கோபாலன் எச்சரித்துள்ளார்.

மனித உடலில் கதிரியக்க அணுக்கள்!

கண்டுபிடிக்கப் புதிய கருவி

அமெரிக்க முன்னாள் இராணுவத்தினர், புதிய மருத்துவக் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்; இது, மனித உடலில் கதிரியக்க அணுக்களைக் கண்டுபிடிப்பதற்கும், அளப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சில நோய்களை நன்ருக ஆராய்ந்து அறிவதற்கு இந்தப் புதிய கருவி மிகவும் உபயோகமாக இருக்கும்.

‘திராவிட நாடு விடுதலை வெகு தொலைவில் இல்லை’

‘மாற்றரும் ஆதரிக்கும் மாபெரும் இலட்சியத்தை நாம் கொண்டிருக்கிறோம்’

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டில் தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி திறப்புரை

கடந்த 22—9—57-ல் திருவண்ணமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மூன்றுவது மாநாட்டில் தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:—

“வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது—தென்னாட்டை வடநாடு வஞ்சிக்கிறது என்று நாம் சொன்னபோது நம்மைக் கேலி செய்தவர்களெல்லாம்,இன்று நம் குரலையே எதிரொலிக்கின்றனர். வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நாம் மட்டுமல்ல—கேரளர், ஆந்திரர், கன்னடர்கூட போர் தொடுக்கும் நிலையிலுள்ளனர்; இதற்கான அறிகுறி இப்பொழுது தென்படுகிறது.

“திராவிடநாடு பிரிவினையை ஆந்திரர் ஆதரிக்கிறார்களா, கேரளர் கேட்கிறார்களா, கன்னடர் ஒத்துக்கொள்கின்றனரா?” என்று கேட்போருக்கு நான் சில எடுத்துக்காட்டுகளைக் கூற விரும்புகிறேன்.

“கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாத், ஐதராபாத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார் — ‘ஐந்தாண்டுத் திட்டத்திலே கேரளம் புறக்கணிக்கப்படுகிறது’ என்று! ‘ரூ. 180 கோடி நாங்கள் கேட்டோம்; ஆனால் ரூ. 87 கோடிதான் டில்லி அரசாங்கம் கொடுக்க இசைந்தது. எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. ஆகவே, எங்களுக்குத் தேவையான பணம் கேட்டு டில்லியுடன் போராடுவோம்’ என்றும் அவர் கூறியிருக்கிறார்; எனவே, நம்பூதிரிபாத், நம் கருத்தை ஏற்கிறார் என்றுதான் பொருள்.

‘கன்னட மாநில முதலமைச்சரான நிஜலிங்கப்பாவும் கூறுகிறார்—‘எங்கள் மைசூர் மாநிலத்துக்கான திட்டங்கள் வெட்டப்பட்டால் கிளர்ச்சி செய்வோம்’—என்று! இவரும் நம் கருத்தை ஏற்கிறார்.

ஆந்திராவைச் சேர்ந்த ராமிரெட்டி என்பார், ‘மத்திய சர்க்கார் ஆந்திரத்துக்கு ஓரவஞ்சனை செய்கிறது; மாற்றாந்தாய் மனப்போக்கில் நடந்து கொள்கிறது’ என்றுகூறி நமது கருத்தைப் பிரதிபலிக்கிறார்.

“எனவே, கன்னடர், கேரளர், ஆந்திரர்கள் மறைமுகமாக நம்மை ஆதரிக்கிறார்கள்; வெளிப்படையாக ஆதரிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

“‘மாநில சர்க்காரின் எல்லா அதிகாரங்களையும் டில்லியில் கொண்டுபோய்க் குவித்துக் கொண்டு மாநில சர்க்காரை வெறும் முனிசிபாலிட்டியைப் போல மாற்றி வருகிறீர்கள்; இது ஆகாது’ என்று திரு. இராசகோபாலாச்சாரியார் போன்றவர்களும் பண்டித நேருவுக்கு எச்சரித்து வருகின்றனர்.

“பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தால்தான் நாட்டில் இந்து--முஸ்லீம் கலவரங்கள் தணிந்து அமைதி நிலவும் என்று முன்பு ஆச்சாரியார் கூறினார். அதை முதலில் ஏற்றுக்கொள்ளாத காங்கிரஸ்காரர்கள், பிறகு பாகிஸ்தான் பிரிவினைக்கு ஒத்துக்கொள்ளும் நிலைஏற்பட்டது. அப்படிப்பட்ட அறிவாளியும் இராசதந்திரியுமான இராசகோபாலச்சாரிதான் இன்று, வடநாட்டு ஆதிக்கத்திற்கு முன்னெச்சரிக்கையாக, ‘என்றாவது ஒரு நாள் தென் மாநிலங்கள் வடநாட்டிலிருந்து பிரியநேரிடலாம்’ என்று கூறி சூசகமாகத் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தந்துள்ளார். காங்கிரசையே முழுக்க முழுக்க ஆதரிக்கும் பத்திரிகைகளெல்லாம் இன்று, வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நம்மைப் போல தீவிரமாக எழுதத் துவங்கிவிட்டன.

“நம் கழகத்திற்கு அப்பாற்பட்டவர்களும் நம் கொள்கையை ஆதரிக்கத்தலைப்பட்டிருக்கின்றனர். டாக்டர் சுப்பராயன், சேதுப்பிள்ளை போன்றவர்களெல்லாம் இன உணர்ச்சி கொண்டு, வடநாட்டு இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்த்து வருகின்றனர் என்ற செய்தி, நம்மை மேலும் ஊக்குவிக்கின்றது.

“எனவே, நம் இலட்சியம் சாதாரணமானதல்ல; மகத்தானதொரு சக்தி படைத்தது. இது விரைவில் வெற்றி பெறும் அறிகுறியை நாம் இப்பொழுது காண்கிறோம்.

“தேர்தலுக்குப் பிறகு நம் கழகம், நகரங்களில் மட்டுமின்றி பட்டிதொட்டிகள், மூலைமுடுக்குகளிலெல்லாம் தழைத்து வளர ஆரம்பித்திருக்கிறது. நகரப் பகுதிகளைவிட கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அதிக அளவில் நம் இயக்கத்தின்பால் அக்கறை காட்டிவருகின்றனர்.

“சமுதாயத்துறையில் நாம் காட்டும் அக்கறையை — நாம் செய்துவரும் பணிகளைச் சற்றுக் குறைத்துக்கொண்டு, அரசியல்—பொருளாதாரத்துறைகளில் இன்னும் அதிகமாக அக்கறை செலுத்திப் பாடுபடுவோமேயானால், கிராமாந்தர மக்களுக்கு நல்ல பலனேற்படும் என்று கருதுகிறேன்; நம் ஆற்றலையும் உழைப்பையும் கிராம மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியுமென நம்புகிறேன்.

“எனவே, நம் உயிர் இலட்சியமான திராவிடநாடு பிரிவினைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற—நம் மொழி, கலை, பண்பாடுகளைக் காப்பாற்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மேலும் ஆக்கமளிக்கக்கூடிய சக்திகளைத் திரட்டவேண்டும்.

“திராவிட மக்களனைவரையும் நம் கழகத்தில் சேரும்படிச் செய்தல் வேண்டும். இது ஒவ்வொரு தி. மு. கழக உறுப்பினரின் கடமையாகும்.

“எதிரிகள் நம்மை இழித்துரைத்தாலும் பழித்துரைத்தாலும் அவைகளைத் துச்சமெனக் கருதி, நம் இலட்சியம் பெரிதென மதித்து, நம் வழிகாட்டியான அருமை அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களும் காட்டும் வழியில் சென்று நாம் பாடுபடுவோமாக! தூய்மையான நமது பணி வளர வளர வெற்றியும் விரைந்து கிட்டுமெனக் கூறி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.”

அணு ஆயுதச் சோதனைகள்

அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்த வேண்டும் என, ரஷ்யா மீண்டும் ஐ. நா.-வில் வற்புறுத்தியுள்ளது. இந்த விஷயத்தைப் பற்றி பொதுச் சபை விவாதிக்க வேண்டுமெனவும் ரஷ்யப் பிரதிநிதி கோரியுள்ளார் எனத் தெரிகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவு

புதிய நடைமுறை நிர்ணயம்

புதுடில்லி, செப். 30—

1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் சமீபத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக இனிமேல் யூனியன் பகுதி அல்லாத இதர எந்த மக்கள் சபைத் தொகுதிக்கும் தனிப்பட ஒரு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படமாட்டாது.

எனவே, அடிப்படையான வாக்காளர் பட்டியல் மாநில சட்டமன்றத் தொகுதிக்குமட்டுமே தயாரிக்கப்படும்; மக்கள்சபைத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலானது, அந்தத் தொகுதியில் அடங்கிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்ததாக இருக்கும்.

இந்த ஏற்பாட்டின் விளைவாக யாராவது ஒருவர் தம் பெயர் பார்லிமெண்டரி தொகுதியின் பட்டியலில் மட்டும் இருந்தால் போதுமென்று விரும்பினுல்கூட, அவர் தம் பெயரை அந்த மக்கள் சபைத் தொகுதியில் அடங்கிய அவரது சட்டசபைத் தொகுதியில் தம் பெயரைச் சேர்த்துக்கொள்ளும்படி மனுச் செய்தாகவேண்டும். சட்டசபைத் தொகுதி வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்த்துக்கொள்ளப்பட்டபின் அதற்குரிய மக்கள் சபைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் தானுகவே சேர்க்கப்பட்டுவிடும்.

விண்ணப்ப நடைமுறை

வாக்காளர் பட்டியல் ஒன்றில் ஒருவருடைய பெயரைச் சேர்ப்பதற்கான ஒவ்வொரு மனுவும் அதற்கான பத்திரத்தில் எழுதப்பட்டு, சம்பந்தப்பட்ட தொகுதியின் வாக்காளர் பெயர்ப் பதிவு அதிகாரியிடம் கொடுக்கப்படவேண்டும். எந்த ஒரு தொகுதியிலாவது தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்து, அத்தேர்தல் பூர்த்தியடையாமல் இருந்தால் அந்த மனுவை அந்த மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிக்குக் கொடுக்கவேண்டும்.

15 தினங்களுக்குள் அப்பீல்

வாக்காளர் பதிவு அதிகாரி எந்த ஒரு மனுவையாவது நிராகரித்தால், அதிலிருந்து 15 நாட்களுக்குள் அந்த மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அப்பீல் செய்யலாம். தலைமைத் தேர்தல் அதிகாரி ஒரு மனுவை நிராகரித்திருந்தால் தேர்தல் கமிஷனுக்கு அப்பீல் செய்யலாம். அந்த அப்பீல் மனுதாரர் சமர்ப்பிக்கிற மனு, ஒரு மகஜர் வடிவில் இருக்கவேண்டும்; எந்த உத்தரவு கோரி அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்தரவின் நகலும், ஐந்து ரூபாய் நீதித்துறை அல்லாத ஸ்டாம்பு வடிவில் கட்டணமும் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் ஏற்கனவேயுள்ள ஒரு பெயரை அந்த இடத்திலிருந்து அதே பட்டியலில் மற்றொரு இடத்துக்கு மாற்ற வேண்டுமென்று சமர்ப்பிக்கப்படுகிற மனுக்கள் விஷயத்தில் வேறு விதமான நடைமுறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய விஷயங்களில் அந்த மனுவை சம்பந்தப்பட்ட தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு மட்டுமே எப்போதும் அனுப்பவேண்டும்: அவர் முடிவுதான் இறுதியானது.

சென்னை—எருக்கஞ்சேரியில் தொழிலாளர் காலனி

சென்னை, செப். 30—

தனிப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்காக, எருக்கஞ்சேரியில் 450 வீடுகள் கொண்ட தொழிலாளர் குடியிருப்பு வசதிக் காலனியை ரூ. 12 இலட்சம் செலவில் அரசாங்கம் கட்டியுள்ளது; 2—10—57-ல் அது திறந்துவைக்கப்படும்.

கேட்டது உணவு; கிடைத்தது கல்!

கோல்டுஸ்மித் வாழ்க்கையில் ஒரு படப்பிடிப்பு

இங்கிலாந்தின் புகழ் பெற்ற எழுத்தாளர் ஒலிவர் கோல்டுஸ்மித்தைப்பற்றி எல்லோரும் அறிந்துள்ளனர்.

அவர் இறந்த பின்னர், இலக்கிய உலகத்தில் அவருக்கு சிறப்பிடம் தரப்பட்டது. அவர் உயிருடன் இருந்தகாலத்தில் அவரைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை.

கோல்டுஸ்மித் 1728-ல், அயர்லாந்தில் பிறந்தார். அவருடைய தந்தை சார்லஸ் கோல்டுஸ்மித்; அவர் ஒரு ஏழைக் கிறித்தவ மத குரு.

பல இன்னல்களுக்கிடையே ஒலிவர் கோல்டுஸ்மித் பி. ஏ. பட்டம் பெற்ருர். அதன் பிறகு, தவிர்க்க முடியாத நிலையில் வேலைக்காக அலைந்தார்; பல இடங்களுக்குச் சென்ருர்; பயன் இல்லை. பின்னர் அவர் எழுத ஆரம்பித்தார்.

உலக இலக்கியத்திற்குப் பல அரிய இரத்தினச் சிறப்பான நூல்களைத் தந்தார்; ஆனுல், அவருடைய வாழ்நாட்களில் அவரை யாரும் அதிகமாக மதிக்கவில்லை. வறுமையால் மிகவும் அவதியுற்ருர்; பரிதாபமான நிலையில் இறந்தார்.

அவர் இறந்த பின்னர், மக்கள் அவர் எழுதியவைகளைப் படித்துப் பாராட்டத் துவங்கினர். 'எவ்வளவு செய்நன்றிமறந்தவர்களாக நடந்துகொண்டுள்ளோம்' என்று அனைவரும் நினைத்தனர்; நல்லறிவு, காலம் கடந்துதான் தோன்றுகிறது!

புத்தக விற்பனை நிலையங்கள், படிப்பகங்கள் ஆகியவை அவருடைய புத்தகங்களுக்கு மதிப்புத் தர முற்பட்டன. மக்களிடம் அவைகளை அறிமுகப்படுத்தி ஆங்கில இலக்கியத்தின் சிறப்பை வளமாக்கினர்.

அதன் பிறகு மக்கள் அவர் பெயரால் ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தி அழியாத மதிப்பைத் தர உறுதிகொண்டனர்; நல்ல சலவைக் கல்லைக்கொண்டு அவருடைய நினைவாக ஒரு மண்டபம் எழுப்பினர்; மண்டபத் திறப்பு விழாவன்று அந்த இடத்தில் மக்கள் திரள் திரளாகக் கூடினர்; அந்த விழாவிற்குக் கோல்டுஸ்மித்தின் தாயார் அழைக்கப்பட்டிருந்தார்; அவரும் அங்கு சென்ருர்; ஆனுல் அந்த அம்மையார் முதிய வயதுடையவராகையால் கண்பார்வை இல்லை; எனவே, தன் கைகளால் தொட்டுப்பார்த்து அந்த நினைவுச் சின்னம் வெறும் கல் என்பதை உணர்ந்தார்; கவலை நிரம்பிய அவருடைய கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கீழே சிந்தியது; 'என் மகன் உணவுக்குப் பிச்சை எடுத்தான்; அவனுக்குக் கிடைத்துள்ளது வெறும் கல்' என்ருர் அம்மூதாட்டியார்!

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஞாயிறு இதழில், தன் பெயரைக் குறிப்பிடாமல் வெளியிட ஒருவர் இதை அனுப்பியுள்ளார்; அது 15—9—57-ல் வெளியாகியுள்ளது.

ஏமாற்றத்தின் எதிரொலி?

இறக்குமதிக் குறைவதற்கு காரணம் என்ன?

புதுடில்லி, செப். 30—

இந்தியப் போராசின் நிதி அமைச்சருக்கு அமெரிக்காவில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவாக, இறக்குமதிக் கொள்கையில் சில மாற்றங்களைச் செய்தாவது நிதி வசதி தேடும் அவல நிலை இந்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியில் இந்தியாவுக்கு உள்ள பற்றாக் குறையை ஓரளவுக்கு ஈடு செய்யும் நோக்குடன் ரூ. 100 கோடி மதிப்புள்ள இறக்குமதி இப்போது குறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் அறிவிப்பும், குழப்பம் நிரம்பிய கொள்கையும் நாட்டில் எந்தெந்தத் தொழில்களைப் பாதிக்கும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்ருகும்.

இறக்குமதிக்கு அனுமதிக்கப்படாத பொருள்களின் விலை உயராமலிருக்குமா, வியாபாரிகள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தாமல் இருப்பார்களா என்பது பற்றி ஒன்றும் தெளிவாக்கப்படவில்லை.

ஆனுல், 'வியாபாரிகள், விலையை இப்போது உள்ளபடியே நீடிப்பதாகப் பேச்சளவில் கூறியுள்ளனர்' என்று இறக்குமதிக் கொள்கையை அறிவித்த திரு. இரங்கநாதன் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

ஏற்றுமதி அதிகரிக்க இறக்குமதியாம்!

முத்துக்கள், வைரக்கற்கள், நவைகள், குடைக்கம்பிகள், காலணிக் கயிறு, வெண்கலம், மூங்கில், சணல், பிரம்பு, சிக்கரி மாவு, தார், சாயப் பொருள்கள், ஆடம்பரப் பைகள், இறகுகள், செய்தித்தாள் போன்ற 46 இலக்குகளுக்குமட்டும் இறக்குமதி செய்ய அனுமதி தரப்படுமாம்.

அனுமதி கேட்பவர்கள் இதிலிருந்து ஏற்றுமதிக்கான பொருள்களைத் தயாரிக்க ஈடுபடவேண்டும் என்ற நோக்குடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

'புதிய வகுப்பு'

ஆசிரியர்மீது நடவடிக்கை

பெல்கிரேட், செப். 30—

அரசாங்கத்திற்கு விரோதமான பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட யூகோஸ்லேவியாவின் துணைத் தலைவர் திரு. மிலோவின் டிஜிலாஸ் மூன்ருண்டுக் கால சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிருர். அவருடைய தண்டனைக் காலம் முடிவு பெறவில்லை. இதற்குள் அவர்மீது மற்ருெரு வழக்குத் தொடரும் செயலில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக அவர் எழுதிவிட்டாராம்; எனவே, 118-வது சட்டப்படி அவர் மீது வழக்குத் தொடரப்படுமாம்; இதற்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்படலாம்.

விசாரணை பெல்கிரேட் நகரத்திற்கு அடுத்து 50 மைல் தூரத்தில் உள்ள 'ஸ்ரெம்ஸ்கா மெட்ரோவிகா'வில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அக்டோபர் 4-ந் தேதி நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் 'புதிய வகுப்பு' என்ற ஆங்கில நூலில், பண்டைய மன்னர்களைவிட இப்போதைய கம்யூனிஸ்டு ஆதிக்கம் முழு அளவில் உறுதி பெற்றுள்ளது என்றும், கொடுங்கோலர்களாகப் பொதுவுடைமைத் தலைவர்கள் ஒரு 'புதிய வகுப்பை' உருவாக்கிவிட்டனர் என்றும் அந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

இது கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பிரச்சாரமாம்—அரசாங்கத்திற்கு விரோதமானதாம்!

கயிறு தொழிலாளருக்குக் கூட்டுறவுக் கழகம்

இராமநாதபுரம், தென்னுற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒவ்வொன்றும், தஞ்சை மாவட்டத்தில் இரண்டும் ஆக 5 கயிறு தொழிலாளர் ஆரம்ப கூட்டுறவுக் கழகங்களை நிறுவ அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கழகத்திற்கும் ரூ. 4,200 மானியமும் ரூ. 26,250 கடனும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. 10 வருடத் தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

'நிறவேற்றுமையை ஏற்கமாட்டேன்'

மருத்துவத் துறையிலுமா பாகுபாடு காட்டுவது?

மனவேதனையுற்ற டாக்டர் பதவியைத் துறக்கிருர்

"நோயாளிகளுக்குக் கண்டுள்ள பிணிக்கு ஏற்றவாறே அறைகள் ஒதுக்கப்படுகின்றன; நோயாளிகளின் இனத்தைக் கொண்டு அறைகள் ஒதுக்கப்படுவதில்லை; "நோயாளிகளின் நிறத்தை ஆராயவேண்டியது டாக்டரின் வேலையல்ல; கருப்பர்—வெள்ளையர் என்ற பாகுபாடு எனக்கு அவசியமில்லை; எல்லோரையும், என் உதவியை நாடும் மக்களாகவே மதிக்கிறேன்; இது என்னுடைய தொழிலுக்கான நியாயமுறையும் கொள்கையும் ஆகும்; எனவே, நீக்ரோக்களைத் தனியாகவும், வெள்ளையரைத் தனியாகவும் பிரித்து மருத்துவம் செய்யவேண்டும் என்ற உத்தரவை நான் அமுல் நடத்த விரும்பவில்லை; அது என் மனச்சாட்சிக்கு விரோதமானது"

என்று, இனவேற்றுமை உத்தரவை அமுல் நடத்தவேண்டும் என்ற உத்தரவுக்குப் பணிய மறுத்து, தன் பதவியைவிட்டு விலகிக்கொண்ட டாக்டர் கல்ஞன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் 'ஆரிஸ்கவுண்டி'யில் ஒரு டாக்டர்; 1952-ம் ஆண்டு முதல் மருத்துவம் செய்துவருபவர். அவரிடம் 36 வெள்ளையர்களும், 6 நீக்ரோ நோயாளிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர் ஆண்டுதோறும் 7,252 டாலர் ஊதியம் பெற்றுவந்தார்.

தொழிற் சங்கங்களின் கூட்டு முயற்சி

உழைப்பாளிகள் உடல் நலனைப் பாதுகாக்க சுகாதார நிறுவனம்

15 இலட்சம் டாலர் செலவில் உருவாகியுள்ளது

உழைப்பாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் சேவை செய்வதற்காக நவீன சுகாதார நிலயம் ஒன்று அமெரிக்காவிலுள்ள பிலாடெல்பியாவில் திறக்கப்பட்டது. 15 இலட்சம் டாலர் செலவில், நகரிலுள்ள தொழிலாளர் சங்கங்களின் கூட்டு முயற்சியால் இது நிறுவப்பட்டது.

சலவைக் கல்லினுலும், கண்ணுடியினுலும் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நான்கு அடுக்கு மாளிகை மிக கம்பீரமாகவும், அழகாகவும் தோற்றமளிக்கிறது. இது ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தின் பலனுகும். 28 தொழிற் சங்கங்கள், தங்களுடைய 52,000 உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் போதிய அளவு மருத்துவ உதவி கொடுப்பதற்கு இந்தப் பணியில் ஒன்று சேர்ந்து ஈடுபட்டன.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்குத் தடையாக இருந்திருக்கக்கூடிய கருத்து வேற்றுமைகளையோ அல்லது போட்டிகளையோ, இந்த 28 தொழிற் சங்கங்களும் ஒழித்துவிட்டதுதான் சிறந்த அம்சமாகும்.

சங்க உறுப்பினர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் நோய்வாய்ப்பட வேண்டுமென்ற அவசியமில்லை; எந்தச் சமயத்திலும் இவர்கள் உடலைப் பரிசோதித்துக் கொள்ளலாம்; சிறிய நோய் பெரும் நோயாகி விடுவதற்குமுன் தகுந்த சிகிச்சைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நிலயம் நகரின் மத்தியில் இருக்கிறது; இதற்கு உதவியாக சிறு மருத்துவ நிலயங்களை நகரின் இதர பாகங்களில் ஏற்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இப்படியும் ஒரு நிலை!

ரெய்பூர், அக். 1—

தியோபாக் என்ற ஊரில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் இலாகாவில் பணியாற்றிவந்த பணியாள் ஒருவர் இறந்துவிட்டிருக்கக்கூடும் என்று முடிவு செய்துவிட்டனராம்.

சிரியா கிராமத்தில் நடைபெற்ற மது சோதனையில் அவர் ஈடுபட்டிருந்தாராம்; அங்கு கிராமவாசிகளுடன் தகராறு ஏற்பட்டு ஒரு கிராமவாசி காயமுற்ருராம். உடனே அந்தப் பணியாளர் பயந்து ஊரைவிட்டே ஓடிவிட்டாராம். போலீஸ் தலையிட்டு நடத்திய விசாரணையில் அவர் இறந்துவிட்டதாக ஏதோ ஒரு பிணத்தைக் கண்டுபிடித்து எரித்துவிட்டனராம்; இதன் மீது வழக்குப் பதிவு செய்து 10 கிராமவாசிகளையும் கைது செய்தனராம்.

சில நாட்களுக்குப் பிறகு உயிருடன் இருந்த அந்தப் பணியாளர் மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டாராம்.

இப்போது, போலீசுக்கு சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளதாம்!

பண்ணைக்காடு தி.மு.க. ஆண்டு விழா

எஸ். எஸ். தென்னரசு பேச்சு

பண்ணைக்காடு, செப். 30—

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பண்ணைக்காடு தி. மு. கழக மூன்ருவது ஆண்டுவிழா 20—9—57-ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கொடைக்கானல் பகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட தேனீ தோழர் வி. வி. குருசாமி அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலமும்—பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

நெடுநாட்களாகக் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து பணி புரிந்த தோழர் குருசாமி அவர்கள், காங்கிரஸ் இயக்கத்தின் குறைபாடுகளையும், தான் அந்த இயக்கத்திலிருந்து விலகியதற்கான காரணங்களையும் விளக்கிப் பேசினுர்.

இறுதியாகத் தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ் மந்திரிகள் கழகப் பேச்சாளர்களின் பேச்சாற்றலைக் குறைவாக மதிப்பிட்டுப் பேசுகின்றனர். இன்றையத் தினம் சமுதாயம் விழிப்புற்றிருப்பதற்கு தி. மு. க.-வின் மேடைப் பேச்சுதான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

"ஆண்டவன் ஒன்றுதான் என்று இராமலிங்கர் சொன்னுர்; அவர் கருத்து நாட்டில் எடுபடவில்லை. மூட நம்பிக்கைகளைக் கண்டித்து முடி மன்னர் குலத்திலுதித்த புத்தரும்தான் சொன்னுர்; அவருடைய கருத்துக்களும் குறுகிய காலத்திற்குள் மறைந்துவிட்டன; ஆனுல், சித்தர்களின் வேகத்தைவிட, புத்தரின் ஆவேசத்தைவிட, சற்றுக் குறைவான வேகத்தில் கடவுள்களைப் பற்றிக் கூறிய தி. மு. க.-வின் பணி, தமிழகத்தில் வெற்றிபெற்று வருகிறதென்ருல், அதற்குக் காரணம் கழகத்தின் மேடைப் பேச்சுதான் என்பதை மறந்துவிடக்கூடாது."

தலைவருக்கும், தோழர் தென்னரசு அவர்களுக்கும் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

(ந. கி.)

மிதியடிகள் தயாரிப்பு நிலயங்கள்

பல்லாவரம், சேலம். மதுரை ஆகியவைகளில் நிறுவப்பட்டுள்ள மூன்று மிதியடி நிலயங்களும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் தனி நிபுணத்துவம் பெற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பல்லாவரம் நிலயம் பெண்கள் மிதியடிகளிலும், மதுரை நிலயம் ஆண்களின் மிதியடிகளிலும், சேலம் நிலயம் செருப்பு வகைகளிலும் நிபுணத்துவம் பெற[illegible]

திருவண்ணுமலை மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் முல்லை சத்தி. செயலாளர்கள் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., இரா. தருமலிங்கம், எம்.பி., திறப்பாளர்கள் <— அண்ணுமலை, கிருஷ்ணமூர்த்தி, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், சவாமி அருணகிரி அடிகள் முதலியோர் ஊர்வலத்திற்குச் செல்லுமுன் எடுக்கப் பட்ட படம்.

திருவண்ணுமலை தி. மு. க. மாநாட்டுத் தலைவரும், திறப்பாளருமான தருமலிங்கம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், வரவேற்புத் தலைவர் முல்லை சத்தியும்.

அண்ணு

சுற்றுப்பயணம்

★

அக்.
6 : பிற்பகல்—வில்லிவலம்
மாலை—செங்சற்பட்டு
7 : சென்னை
12 : காவேரிப்பட்டினம் (நாடகத் தலைமை)
13 : கோவை
14 : ஆனமலை
15 : சென்னிமலை
16 : கோபிசெட்டிப்பாளையம்
22 : நீர்வளூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா
26 : மயிலை நபிகள் நாயகம் விழா

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

அக். 4 : குளூர்
6 : காரைக்குடி
8 : மாதர்வேளூர்
9 : கண்டியாமேடு
10, 11 : பெங்களூர்பகுதிகள்

கவர்னர் ஜான் இறுதி யாத்திரை

சென்னை, அக். 2 —

தமிழ்நாட்டின் கவர்னராயிருந்த ஜான் அவர்களின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெற்றன.

கிண்டி 'ராஜபவன'த்திலிருந்து அவரது சடலம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, மைலாப்பூர் சாந்தோம் தேவாலயத்தில் முழு இராஜாங்க மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

அடக்கம் செய்யப்பட்ட தேவாலயத்திலும், ஊர்வலம் வந்த வழி நெடுகிலும் எண்ணற்ற மக்கள் அமைதியாக கூடிநின்று மறைந்த கவர்னருக்குத் தங்களின் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

நாகர்களின் விடுதலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சுதந்தரத்திற்குமுன் வெள்ளை அதிகாரிகளின் கடைசி காலக் கைங்கரியங்களுள் ஒன்றுதான், இந்த நாகர்களை சுதந்தரம் கோருமாறு தூண்டியதுமாகும்.

"நாகர்கள் அனைவரும், உண்மையில், ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர்; பல வகுப்பினராவர். அவர்கள் பல மொழி பேசுகின்றனர். ஒருவகையான அசாமி திரிபுமொழி இவர்களது பொது மொழியாக விளங்குகிறது.

"சுதந்தரத்திற்குப்பின் பிஜோ கிளம்புகிறார்; அவர் நாகர்களிடையே ஏதோ ஒருவகையான தலைவன் எனப் பெயர்பெற்று விடுகிறார்.

"அவர், சுபாஷ் சந்திரபோசுடன் தொடர்புகொண்டவர் என்று கூறப்படுகிறது; எத்தகையத் தொடர்பு என்பது எனக்குத் தெரியாது.

"கடந்த சில ஆண்டுகளில் பிஜோவை நான் இருமுறை சந்தேன்; அப்போது நான் அவரிடம், 'நாகர்களுக்குச் சுதந்தரம் என்ற பேச்சுக்கே இடமில்லை' என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டேன். இன்னும் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறேன்.

"ஆனல், சுதந்தரம் தவிர வேறு எதுபற்றியும் நாம் பேசுவதற்குத் தயாராகவே இருந்து வருகிறோம் என்று கூறிவந்திருக்கிறோம்; தேவைப்பட்டால், அரசியல் சட்டத்தின் ஆருவது ஷெட்யூலைத் திருத்தவும் தயார் என்று கூறினேன்.

"மலைவாழ் மக்கள்பற்றிய நமது பொதுவான கொள்கை எல்லாம், அவர்களின் வாழ்க்கையில் குறுக்கிடுவது இல்லை என்பதும், முடிந்த அளவு அவர்களுக்கு சுய ஆட்சி வழங்குவது என்பதும்தான்."

இவ்வாறு கூறியுள்ள பண்டிதர், தொடர்ந்து, அண்மையில் தனக்கும் நாகர் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றியும் நாகமலைப் பகுதியில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பற்றியும், இனி அங்கு அமைதிநிலவுவதற்கான வாய்ப்புகள் பற்றியும் விளக்கியுள்ளார்.

மேவானியில்

'நம் நாடு' விற்பனையாளர்
மே சு. சாமிநாதன்
மேவானி அஞ்சல்
(வழி) அந்தியூர், ஈரோடு வட்டம்
[illegible]வட்டம்.

தி. மு. கழகத்தின் சட்ட மன்றப் பணி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டிய இடத்திலிருப்பதால் கேட்கிறாய்—'கருடா, சௌக்கியமா' என்று—என்பதாக கருடன் சொன்னதாகப் புராணத்திலே ஒரு கதை உண்டு.

"நிதியமைச்சர் சுப்பிரமணியம்—ஜடாபாரத்திலே இருக்கிற பாம்பு; அண்ணுதுரை—வட்டமிட்டுக்கொண்டிருக்கிற கருடன்; எனவே, 'கருடா, சௌக்கியமா?' என்று ஏன் அந்தப் பாம்பு கேட்காது?

"நீங்கள் அந்த நிலைமைகளைப் பார்த்துத்தான் அந்த நினைப்பைக் கணக்கெடுக்கவேண்டுமே தவிர, ஏதோ அகில உலகத்திலே இருக்கின்ற சட்டமன்றங்களில் யார் யார் திறமைசாலிகள் என்று கண்டுபிடிக்க ஒரு பரீட்சை வைத்து, அதற்குத் தலைமை அதிகாரியாக சுப்பிரமணியத்தை நியமித்ததைப் போலவும், அதற்கு மாணுக்கராக கருணநிதி போய் நின்றதைப் போலவும், அவர் எழுதிக் கொடுத்ததைப் படித்துப் பார்த்து 6 மார்க்கு போட்டதைப் போலவும், அண்ணுதுரை பேசியதற்கு 5 மார்க்குப் போட்டதைப் போலவும் நீங்கள் கருதினல்—நீங்கள் அப்படிக் கருத வேண்டுமென்றுதான் அவர் அப்படிப் பேசினர்; அவர் அப்படிப் பேசியதிலே வெற்றி பெற்றுரே என்பதில் எனக்கு வருத்தம்.

"நீங்கள், அவர் கூறியதையொட்டி, என்ன எண்ணியிருக்க வேண்டுமென்றுல் — துணிந்து நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்; உண்மையிலேயே சொந்த உணர்ச்சியோடு சொல்லியிருக்க வேண்டும்—'எங்களுடைய இயக்கக்காரர்கள் சரியாக நடப்பார்களா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியும்; நீ யார் அதைச் சொல்ல? — முதல் கேள்வி; 'உனக்கு எப்படித் தெரியும் அப்படிச் சொல்ல?'—இரண்டாவது கேள்வி; 'உனக்கு என்ன அந்த உரிமை?'—மூன்றுவது கேள்வி; இவைகளை நீங்கள் எழுப்பியிருக்க வேண்டும். அதற்கு மாருக நம்முடைய நண்பர்கள், நாங்கள் தந்த புள்ளி விவரங்களையும், அவர்கள் தந்த புள்ளி விவரங்களிலேயுள்ள கோளாறுகளையும், நாங்கள் தந்த காரணங்களையும், அவர்கள் காரணங்கள் தராமல் போன விந்தையையும் இவைகளையெல்லாம் எடுத்து விளக்கினர்கள்; இவைகளையெல்லாம் விளக்கிக்கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் சுப்பிரமணியத்தினுடைய உண்மையான எண்ணம்.

"சுப்பிரமணியம் அவர்கள் வழக்கறிஞராகப் பட்டம் பெற்று—வழக்கறிஞராகப் பணியாற்றி அதிலே வலலமையைக் காட்ட முடியாத காரணத்தாலே, அரசியலுக்குள் நுழைந்தசில அபூர்வப் பிறவிகளிலே ஒருவர்.

"எனக்கு முன்னுலே இங்கே பேசினர் என்னுடைய நண்பர் வி. பி. இராமன் அவர்கள்—இளைஞர். நீங்களெல்லாம் ஆச்சரியப் படுவீர்கள்; ஆச்சரியப்படுவது மட்டுமல்ல—தி. மு. கழகம் எந்த அளவுக்கு மறுமலர்ச்சி பெற்று வருகிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; வி. பி. இராமன் அவர்கள் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர். பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த ஒரு படித்த இளைஞர்—பட்டம் பெற்ற ஒரு வழக்கறிஞர் நம்முடைய மேடையில், அனுதாபி என்ற முறையிலே அல்ல—ஆதரவாளர் என்ற தன்மையிலே அல்ல—விருந்தாளி என்ற முறையிலே அல்ல—திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்ற முறையில், 1957-ல், திருவண்ணுமலையில் பேசியிருக்கின்றார்; அதனை நான் மனதார வரவேற்கின்றேன்.

"பல்லாண்டுக் காலமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன்—படித்த பார்ப்பன இளைஞர்கள் தி. மு. கழகம் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களையெல்லாம் எண்ணிப் பார்ப்பார்களானல்—ஆய்ந்து பார்ப்பார்களானல்—அவர்களெல்லாம் இந்த இயக்கத்திலே சேர்ந்துவிடுவார்களானல், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடும், பகையும் தமிழர்களிடத்திலே குறைக்கப்படும்—நீக்கப்படும் — போக்கப்படும்என்று. நான் சொன்னதற்கு எதிரொலியாகக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பைப்போல், நம்முடைய நண்பர் வி. பி. இராமன் அவர்கள் இன்றையத் தினம் நமக்குக் கிடைத்திருக்கின்றார்கள்.

"இப்படிப் பலபேர் பெரியாருக்குக் கிடைக்காத காரணத்தால்தான் பெரியார், அவர்களை விரட்டவேண்டுமென்று சொல்லுகின்றாரே தவிர, நல்ல பெரிய பார்ப்பனத் தலைவர்கள்—ஆச்சாரியாரைப் போன்றவர்கள்—சிவசாமி அய்யர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் — இராமசாமி சாஸ்திரியார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—எப்படி இளைஞர்கள் இபக்கத்திலே வி. பி. இராமன் அவர்கள் வந்து சேர்ந்தாரோ அதைப்போல பெரியாருடைய இபக்கத்திலே அவருடைய வயதிற்குத் தக்கவர்கள் சேர்ந்தால், அவரும் பாவம்—இந்த ஆபத்தான காரியத்திலும், அனுவசியமான தொல்லையிலும், அருவருக்கத்தக்க திட்டத்திலும், அவருக்கே பிடிக்காத தொல்லையிலும் தன்னையே மாட்டிக்கொண்டிருக்கமாட்டார். தி. மு. கழகம் அப்படிப்பட்ட 'இக்கட்டு'களுக்கெல்லாம் இழுத்துச் செல்லப்பட மாட்டாது என்பதை எடுத்துக் காட்டுவதன் அறிகுறியைப்போல் நம்முடைய நண்பர் வி. பி. இராமன் அவர்கள் வந்திருக்கின்றார்.

"அவர் ஒரு வழக்கறிஞர்; அரசியலிலே பேசுகின்றார்; ஆனல் வழக்கறிஞராகவும் பணியாற்றுகின்றார். நிதியமைச்சர் சுப்பிரமணியம் அப்படி வழக்கறிஞராகவே பணியாற்றிக்கொண்டு அரசியலிலே இருப்பவர் அல்ல; அதைச் சொல்வதற்குத்தான் வி. பி. இராமன் அவர்களை அறிமுகப்படுத்தினேன்.

"நிதி அமைச்சர் சுப்பிரமணியம், நிதி அமைச்சர் ஆனபிறகு உங்களுக்குத் தெரியும்—நிதியமைச்சர் ஆவதற்கு முன்னுலே சுப்பிரமணியம என்பவர்—கொங்கு நாட்டிலே ஒரு பெரிய வழக்கறிஞராக இருக்கிறார்; அவர் மாதத்திற்கு ஆறு கொலைக் கேசிலே ஆஜராகிறார்; ஆஜராகிற வழக்கிலேயெல்லாம் வெற்றி பெற்றுவிட்டார் என்று எனக்கு யாராவது ஆதாரம் காட்டுவார்களானல் நான் என்னுடைய கருத்தைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கிறேன். கோவையிலே அவர் வக்கீலாக இருந்த காலத்திலெல்லாம், மற்ற வக்கீல்கள் பார்த்து, 'ஐயோ பாவம், நல்லவர்—இளைஞர்—வேலையில்லாமல் இருக்கின்றாரே' என்று அனுதாபப்பட்டார்களே தவிர, இவர் கோயமுத்தூரிலே கீர்த்திவாய்ந்த வழக்கறிஞர் அல்ல.

"தி. மு. கழகத்தினுடைய வாயை அனுவசியமாக சுப்பிரமணியம் கிண்டிய காரணத்தினல், அவர் வேலையையிழந்த—அல்லது வேலையில்லாத வழக்கறிஞர் என்ற உண்மையைத் தமிழ்நாட்டுக்குக் கூறவேண்டிய அவசியம் இன்றையத்தினம் ஏற்பட்டது; இல்லையானல் அதைக்கூட நான் சொல்லியிருக்கமாட்டேன்.

"அதற்குப்பிறகு அரசியலுக்கு வந்தவர் அதிகமாக அனுபவம் பெற்றுவிட்டார் என்றுல், அந்த அனுபவத்தைப் பெறுவதற்கு—சர் ஏ. இராமசாமி முதலியார் அனுபவத்தைப் பெறுவதற்கு—இன்னும் 20 ஆண்டுக்காலம் தேவை; இன்னும் 20 ஆண்டுக்காலம் காங்கிரசிலிருந்து, காங்கிரசிலும் இடம் கிடைத்து, சட்டமன்றத்திலேயும் இவருக்கு இடம் கிடைக்குமானல் அப்பொழுது அந்த அனுபவம் கிடைக்கும்.

"சட்டசபைக்கு நாங்கள் முதல் நாள் போவதற்குமுன்பு, உலகப் புகழ்பெற்ற டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் அவர்களைப் போய்ப் பார்த்தேன்; அவர் என்னிடத்திலே, சட்டமன்றத்திலே எப்படி எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டும என்பதைப் பற்றி அன்போடும்—நல்ல அறிவுத் தெளிவோடும்—அனுபவத்தைக் கலந்தும் அரைமணி நேரத்திற்குமேல், 'இப்படியெல்லாம் நடக்க வேண்டும் — இப்படியெல்லாம் பேசவேண்டும்' என்றெல்லாம் எடுத்துச் சொன்னர்கள்; அவைகளையெல்லாம் ஆற அமர கேட்டுவிட்டு நான், சர் ஏ. இராமசாமி முதலியாரிடத்திலே சொன்னேன்—'ஐயா, நீங்கள் சொன்ன புத்திமதிகளையெல்லாம் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்; நீங்கள் சொல்லியபடி நாங்கள் பயிற்சி பெறுகிறோம்; ஆனல் அதற்கு முன்னுலே ஒன்று உங்களுக்கு நான் சொல்லுவேன்—'சட்டசபையிலே இன்றையத்தினம், இருக்கிற 'தரம்' நீங்கள் கார்ப்பொரேஷனிலே இருந்தபொழுது கார்ப்பொரேஷனுக்கு இருந்ததே 'தரம்'—அதைவிட மட்டம்; ஆகையினலே எங்களுக்கு இப்பொழுதிருக்கிற தகுதியே போதும்; இவ்வளவு பயிற்சி எங்களுக்குத் தேவையில்லை'—என்று அவர்களிடத்திலே சொன்னேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.